1970 செப்டம்பர் 5]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் இந்த மசோதாவை இப்பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I beg for leave to introduce the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill 1971.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணிர் வரி (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 17/70).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 17/70) be taken into consideration.

As a general principle, if on account of the levy of water rate in a project, there has been an increase in the assessment or water-cess by 60 per cent, the project concerned is being exempted from the scope of the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess Act, 1963 (Tamil Nadu Act 8 of 1963) and such projects are mentioned in Schedule I to that Act. The Vidur Reservoir Project in South Arcot district is one of such projects mentioned in Schedule I of the said Act. On a representation received from the ryots of the Vidur Reservoir Project against the levy of enhanced rate, the Government issued orders cancelling the enhanced wet assessment with effect from the 1st July, 1963 and decided to levy the assessment under the said Tamil Nadu Act 8 of 1963. Consequently it was decided to omit the project from Schedule I to that Act.

Further, at present, water rate is being levied at enhanced rates for the lands under the Tholudur (Wellington) Reservoir Project and Gomukhinadi Reservoir Project in South Arcot district, resulting in an increase of more than 60 per cent in wet assessment

---

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 25th August 1970.

or water-cess. It was, therefore, decided to exempt the Tholudur (Wellington) Reservoir Project and Gomukhinadhi Reservoir Project from the provisions of the Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess Act, 1963, by including it in Schedule I to that Act.

Accordingly, a notification was issued under section 13 (1) of the said Act, by which the Vidur Reservoir Project was omitted from Schedule I to that Act and Tholudur (Wellington) Reservoir Project and Gomukhinadhi Reservoir Project were added to the said Schedule. The Bill seeks to replace the said notification in terms of the provisions of section 13 (2) of the said Act.

I request the House, Sir, to accept the motion.

*திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவிலே ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸிலே

'Tamil Nadu Additional Assessment and additional water-cess Act 1963 Schedule I 60 per cent of the increase of basic wet assessment' என்று இருக்கிறது. அதன் பிரகாரம் முதல் ஷெட்யூலிலே 60 சதவிகிதம் இன்க்ரீஸ் ஆஃப் பேஸிக் வெட் லேண்ட் அஸஸ்மெண்டிலே இருந்தால் அந்த ஷெட்யூலில் சேர்க்கவேண்டுமென்று அர்த்தமாகிறது. அதிலே 10 ரூபாய் அதிகமாக வரிப் போடப்பட்டதால் 60 சதவீதத்திற்கு மேல் வந்ததாகவும் அதனுலே பர்ஸ்ட் ஷெட்யூலில் சேர்க்கப்பட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டதாகவும், இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய ரயட்களுக்கு வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்ற முறையிலே ரூ. 10-ஐ எடுத்து விடுவதனுல் அந்த பர்ஸ்ட் ஷெட்யூலில் இருந்து அதை எடுக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கோமுகிநதி ரிசர்வாயர் ப்ராஜக்ட், தொளுடூர் (வெல்லிங்டன்) ரிசர்வாயர் ப்ராஜக்ட் இவற்றைப் பொறுத்த வரையில் வெட் லேண்ட் அஸஸ்மெண்டிலே 60 சதவீதத்திற்கும் அதிகமாக வரி வருகிறது.

நான் அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு சிறிய கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன். ஆக்ட் பிரகாரம் வாட்டர் அஸஸ்மெண்ட் ஆர் வாட்டர் ஸெஸ் என்று இருக்கிறது. வாட்டர் அஸஸ்மெண்ட் அல்லது வாட்டர் செஸ் இரண்டிலே ஒன்றுதான் போடவேண்டுமென்ற நோக்கமா, பர்ஸ்ட் ஷெட்யூலிலே வந்தால் ஒன்றுதான் போடவேண்டுமென்ற நிலைமை இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலே இது எந்த விதத்திலே ரயட்களுக்குப் பளுவை குறைக்கிறது என்பதில்லே, எனவே இதைத் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் மிகுந்த மகிழ்ச்சியோடு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வீடூர் நீர்த்தேக்கப் பகுதிக்கு அதனுல் லாபம் இருக்கிறது என்பதாலே என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள்

1970 செப்டம்பர் 5] [திரு. க. இராமமூர்த்தி]

அரசிடம் கோரிக்கை விடுத்ததன் விளைவாக இந்த மசோதா வந்திருக்கிறது. அதே நேரத்திலே தோளுடூர் (வெல்லிங்க்டன்) ரிசர்வாயர் ப்ராஜக்ட் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும், கோமுகி ரிசர்வாயர் ப்ராஜக்ட் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும், இந்த வீடூர் ப்ராஜக்டைச் சேர்ந்தவர்களுக்கு என்ன லாபம் கிடைக்கிறதோ அந்த லாபம் அவர்களுக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. வீடூர் பகுதியை அந்த ஷெட்யூலிலிருந்து விட்டு விட்டு தோளுடூர் ரிசர்வாயர் ப்ராஜக்டையும் அதிலே சேர்த்திருக்கிறோம். ஒன்றை எடுத்துவிட்டு வேறு ஒன்றைச் சேர்த்திருக்கிறோம். ஒரு பகுதிக்குக் கிடைக்கும்படியான லாபம் இன்னொரு பகுதிக்குக் கிடைக்காத அச்சம் இருக்கிறது.

திரு. சுப்பராஜா அவர்கள் கூறியதுபோல் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்லே விவரங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. வீடூர்ப் பகுதியிலே அதனால் என்ன லாபம் அல்லது வரி விகிதம் என்ன அவர்களுக்கு விதிக்கப்படுகிறதோ அதே விகிதம் கோமுகி ரிசர்வாயர் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும் தோளுடூர் ரிசர்வாயர் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும் விதிக்கப்படும் என்ற உறுதியை அமைச்சர் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதிலே ஒன்றும் குழப்பம் இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1963-ஆம் ஆண்டிலே அதிகமாக விதிக்கப்பட்ட தீர்வையை எடுத்துவிட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே அங்கே வசூல் செய்த உபரி வரிகளை சில பேர்கள் கட்டிவிட்டார்கள், சில பேர்கள் கட்டாமல் இருக்கிறார்கள். அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் 15 கிராமங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. எனவே உபரி வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது, அதைத் திருப்பிக்கொடுக்க வழிவகை செய்வார்களா என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இது ஒரு சாதாரண விஷயம்தான். மசோதாவிலே தவறு ஒன்றும் இல்லை. ஒரே வரியைத் தெளிவாக விளக்கிவிட்டால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு பொது விதி என்னவென்றால்

'If on account of levy of water rate in a project there has been increase in the assessment of water cess by 60 per cent the project concerned is being exempted from the scope of Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess Act and such projects are mentioned in Schedule I to that Act.'

என்று இருக்கிறது. இதுதான் அதிலே இருக்கிற விவரம். கூடுதல் வாட்டர் செஸ் விதிப்பதின்மூலம் ஏற்கனவே இருக்கிற வரியிலே 60 சதவீதம் ஆகிவிட்டால் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்து ஷெட்யூல் ஒன்றிலே சேர்க்கப்படவேண்டுமென்பது பொருள்.

நாம் வாட்டர் செஸ் போடுகிறோம். ஏற்கனவே இருக்கிற வரியைவிட 60 சதவீதம் கூடிவிட்டால் இந்தச் சட்டத்திற்குள் வராது. அது அட்டவணைக்குள் வரும். எக்ஸம்ப்ட் பண்ண வேண்டுமென்பது ஒரு அம்சம், அட்டவணையிலே சேர்க்கவேண்டு மென்பது இரண்டாவது அம்சம். வீடூர் பகுதியிலே வரிப் போட்டோம், 60 சதவீதத்திற்கு மேல் போய்விட்டது. திரு. பால கிருஷ்ணன் அவர்கள் கூறிய மாதிரி, திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறியமாதிரி அவர்களுடைய கோரிக்கையை ஒத்துக்கொண்ட காரணத்தினாலே 60 சதவீதத்திற்குக் கீழே விழுந்துவிட்டது. ஆகை யினாலே முதல் ஷெட்யூலிலிருந்து வெளியே எடுக்கிறோம். ஒன்று எக்ஸம்ப்ட் பண்ணவேண்டும், இரண்டாவது அது அட்டவணையிலே வரவேண்டும். இப்பொழுது 60 சதவீதத்திற்குக் கீழே போய் விட்டதாலே எடுத்து விடுகிறோம். இரண்டாவது சொல்லிய பகுதி தோளுடூர் ரிசர்வாயர் பகுதிக்கும், கோமுகி ரிசர்வாயர் பகுதிக்கும் நாம் வரி விதிப்பதன் மூலமாக 60 சதவீதம் வந்துவிடுகிறது. ஒன்று கீழே விழுந்துவிடுகிறது, ஒன்று மேலே போய்விடுகிறது. ஆகவே, இதிலே முரண்பாடு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, 10 ரூபாயை எடுத்துவிட்டதாலே ஷெட்யூலிலிருந்து வெளியே வந்துவிடும். வாட்டர் செஸ் குறைக்கப்படுவதால் அது எக்ஸம்ஷனிலே வராது அல்லவா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 60 சதவீதம் வந்தால்தான் பாதிக்கும். ஏற்கனவே இருக்கிற வரியிலே 60 சதவீதம் வந்து விட்டால் அதைச் சேர்க்கிறோம். அந்த நிலைமை முன்பிருந்தது. இப்பொழுது அந்த வரியை எடுத்துவிட்டதால் 60 சதவிகிதத்திற்குள் வந்துவிட்டது. அது அட்டவணையிலே இருக்கவேண்டியதில்லை. இதற்காக ஏற்கனவே நோடிபிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதற்காகத்தான் இந்த மசோதா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, குருந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.